## சுருக்கம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகியவற்றில் பணிபுரிந்து 15.09.08 முதல் ஒய்வு பெற்றவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுவரும் மாதாந்திர சிறப்பு ஓய்வூதிய திட்டத்தினை 15.09.08க்கு முன்னர் பணி ஓய்வு பெற்ற அனைவருக்கும் விரிவுபடுத்தி சிறப்பு ஓய்வூதியம் வழங்க அனுமதித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி.2)துறை

அரசு ஆணை (நிலை) எண். 175

நாள் 31–12–2009
திருவள்ளுவர் ஆண்டு 2040
மார்கழி 16 ம் நாள்

படிக்கப்பட்டது : -

1 அரசு ஆணை (நிலை) எண்.391 நிதி (ஊ.பி) துறை நாள் : 15.09.2008.
2 அரசு ஆணை (நிலை) எண்.146, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் : 16.11.09
3 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21.11.09 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்புகள்.

---

ஆணை :-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் சத்துணவு / அங்கன்வாடி பணியாளர்கள் அனைவரும் ஓய்வு பெற்ற பின்னரும் அவர்களது வாழ்வாதாரத்திற்கு வழி செய்யும் வகையில் 15.09.2008 முதல் கீழ்கண்டவாறு சிறப்பு ஓய்வூதியம் நிர்ணயித்து ஆணையிடப்பட்டது.

- சத்துணவு அமைப்பாளர் / அங்கன்வாடி பணியாளர் மற்றும் குறு அங்கன்வாடி பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 700/–
- அங்கன்வாடி உதவியாளர் நிலை – I / சமையலர் ஆகியோருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.600/–
- அங்கன்வாடி உதவியாளர் நிலை – II / சமையல் உதவியாளர்கள் ஆகியோருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 500/–

இச்சிறப்பு ஓய்வூதியமானது 15.09.2008 முதல் பணியிலிருந்து ஓய்வுபெறுபவர்களுக்கு மட்டுமே அமல்படுத்தப்பட்டது.

2. அதன் பின்னர், மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் பணிபுரியும் அங்கன்வாடி பணியாளர்கள், உதவியாளர்களுக்கு சிறப்பு ஓய்வூதியம் பெற்று வழங்க பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து ஆணை வெளியிடப்பட்டது.

3. இந்நிலையில் சத்துணவு, குழந்தைகள் மைய பணியாளர்கள் 21–11–09 அன்று நடத்திய நன்றி அறிவிப்பு மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்வருமாறு அறிவிப்பு செய்துள்ளார்கள்:-

> "சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகியவற்றில் பணிபுரிந்து 15.09.2008 முதல், ஓய்வு பெற்றவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வரும் மாதாந்திர சிறப்பு ஓய்வூதிய திட்டம் , 15.09.2008க்கு முன்னர் பணி ஓய்வு பெற்ற அனைத்து சத்துணவு / அங்கன்வாடி பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இதன்மூலம் ஏறத்தாழ 16 ஆயிரம் ஓய்வு பெற்ற பணியாளர்கள் பயன் பெறுவார்கள்."

4. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் படி சத்துணவு / ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் பணியாற்றி 15.09.2008 முதல் ஓய்வு பெற்றவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வரும் மாதாந்திர சிறப்பு ஓய்வூதியத் திட்டத்தை 15.09.2008க்கு முன்னர் பணி ஓய்வு பெற்ற சத்துணவு / அங்கன்வாடி பணியாளர்களும் பயனடையும் வகையில் விரிவுபடுத்தி ஆணையிடப்படுகிறது.

5. மேற்காணும் சிறப்பு ஓய்வூதியம் பெற்று வழங்க ஏற்படும் செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

"2235–சமூகப்பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப்பாதுகாப்புத் நலத்திட்டங்கள்– 102 சமூகப்பாதுகாப்பு திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் – I திட்டத்தில் சேராதது AP ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்ற சத்துணவுப் பணியாளர்களுக்கு வாழ்வாதார உதவிக்கான சிறப்பு ஓய்வூதியம் – 27. ஓய்வூதியங்கள் – 05. சமூகப்பாதுகாப்பு ஓய்வூதியங்கள்".
(த.தொ.கு.2235–60–102–AP-2754)

"2235–சமூகப்பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப்பாதுகாப்புத் நலத்திட்டங்கள்– 102 சமூகப்பாதுகாப்பு திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் – I திட்டத்தில் சேராதது AQ புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்ற சத்துணவுப் பணியாளர்களுக்கு வாழ்வாதார உதவிக்கான சிறப்பு ஓய்வூதியம் – 27. ஓய்வூதியங்கள் – 05. சமூகப்பாதுகாப்பு ஓய்வூதியங்கள்".
(த.தொ.கு.2235–60–102–AQ-2752)

6. இத்திட்டம், இந்த அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் ஒத்திசைவுடன், அதன் அ.சா.கு.எண்.31JS (MP)/Pen/09 நாள் 31–12–09ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.இராமமோகனராவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

சமூக நல ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர் / ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், சென்னை–113.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை,சென்னை–15.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–5/35/79.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்,மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
தலைமை துறை அரசு நிறுவனத் தணிக்கையர்,சென்னை–2.

நகல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம்,சென்னை–9.
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (ச.ந.7பிரிவு)துறை, சென்னை–9.
நிதி (ஒய்வூதியம்) துறை, சென்னை–9.
நிதி (ஊதியக்குழு) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.